சுருக்கம்

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை – தமிழ்நாடு மாநில வாணிபக் கழக (டாஸ்மாக்) சில்லறை மதுபான விற்பனைக் கடைகளின் எண்ணிக்கையை மேலும் குறைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறை

அரசாணை (பத்தாண்டு ) எண்: 55 நாள்: 20.02.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048
துன்முகி, மாசி 8

படிக்கப்பட்டது:

அரசாணை (பத்தாண்டு) எண் 113, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறை, நாள் 23.05.2016.

------

ஆணை:

பூரண மதுவிலக்கை படிப்படியாக எய்திட, முதற்படியாக, பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில், டாஸ்மாக் சில்லறை மதுபான விற்பனைக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த பார்களின் பணி நேரம் குறைக்கப்படும் என்றும், 24.05.2016 முதல், அப்போதிருந்த பணிநேரமான காலை 10 மணி முதல் இரவு 10 மணிக்குப் பதிலாக நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரை பணிநேரமாக இருக்கும் என்றும், டாஸ்மாக் சில்லறை மதுபான விற்பனைக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும், தகுதியான கடைகள் கண்டறியப்பட்டு, 500 டாஸ்மாக் சில்லறை மதுபான விற்பனைக் கடைகள் மூடப்படும் என்றும் ஆணையிடப்பட்டது.

2. பூரண மதுவிலக்கை படிப்படியாக எய்திட, அடுத்தபடியாக, டாஸ்மாக் சில்லறை மதுபான விற்பனைக்கடைகளின் எண்ணிக்கை மேலும் குறைக்கப்படும் என்றும், இதன்படி அடுத்தகட்டமாக தகுதியான கடைகள் கண்டறியப்பட்டு, மேலும் 500 டாஸ்மாக் சில்லறை மதுபான விற்பனைக் கடைகள் மூடப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

3. அதன்படி, மேற்கூறிய ஆணைகளை செயல்படுத்த, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர்

மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், சென்னை-8.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) தனிச்செயலர், சென்னை-9.
இ.கோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்